# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

பெப்ரவரி 8 2013

**ஜப்பான் வடக்கில் கண்ணிவெடி அகற்றலுக்கு US $ 860,500 ஐ நன்கொடை உதவியாக வழங்குகிறது**

ஜப்பானிய அரசாங்கம் கண்ணிவெடிகளற்ற இலங்கை என்ற இலக்கை அடைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை துரிதப்படுத்துவதற்காக வடக்கில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுககு மேலதிகமாக US $ 860,500 (அண்ணளவாக 107 மில்லியன் ரூபாய்களை) ஐ நன்கொடை உதவியாக HALO Trust நிறுவனத்தினூடாக வழங்குகிறது.

உலக சமாதானத்துக்கும் செழுமைக்கும் அர்ப்பணிப்புடன் பங்களிப்பு செய்யும் நாடு என்ற வகையில், ஜப்பான் அதன் உதவிகளின் மூலம் இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்துதல, மீள்கட்டுமானங்களை மேற்கொள்ளல் மற்றும் நடுத்ததர நீண்ட கால அபிவிருத்தியை ஏற்படுத்துதல் என்பனவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இடம்பெயர்ந்தோர் மீள்திரும்புவது மற்றும் மீள்குடியமர்வதை துரிதப்படுத்துவதற்கும் விவசாயம் மற்றம் வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் ஜப்பான் இலங்கையில் கண்ணிவெடி அகற்றலுக்கு பிரதான நன்கொடையாளராக இருந்து வருகிறது. 2003 ம் ஆண்டிலிருந்து ஜப்பானிய அரசாங்கம் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்கு US$ 24 million (அண்ணளவாக ரூ. 3,025 மில்லியன்) ஐ அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கியிருக்கிறதுறது. மனித பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இவ்வுதவிகள் மக்களுக்கு நேரடியான நலன்களை வழங்கும் என ஜப்பான் எதிர்பார்க்கிறது.

HALO Trust நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திரு. பர்தலோமியு டிக்பி அவர்கள் கூறுகையில், "HALO Trust நிறுவனம் 2002ம் ஆண்டிலிருந்து அரசாங்க ஆதரவுடன் வட இலங்கையில் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்டு யாழ்ப்பாணம், கிளினொச்சி, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. 2013 ம் ஆண்டானது HALO Trust நிறுவனத்துக்கு அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தினூடாக ஜப்பானிய அரசாங்கம் வழங்கி வரும் உதவிகளின் பத்தாண்டு பூர்திதியாகும்

ஜப்பானால் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களினூடாக HALO Trust நிறுவனத்தால் 668 ஹெக்டெயார் நிலப்பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன் 23,000க்கும் மேற்பட்ட நிலக்கண்ணிவெடிகளும் 1400 மேற்பட்ட வெடிக்காத வெடிபொருட்களும் தேடியழிக்கப்பட்டுள்ளன. இந்நிலப்பகுதியின் துப்புரவுபடுத்தலானது யுத்தத்தால் இடம்பெயர்ந்தோர் உட்பட ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்தோர் மீள்திரும்புவதற்கும் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் உதவியிருக்கிறது. HALO Trust நிறுவனம் கண்ணிவெடி அகற்றலுக்கு தொடர்ச்சியாக நிதி உவுதவிகளை வழங்குவதையிட்டு ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி கூறுகிறது".

கண்ணிவெடி அகற்றலுக்கு மேலதிகமாக வடக்கின் துரித மீட்சிக்கு ஜப்பான் வைத்தயசாலை, சக்தி, நீர்ப்பாசனம,; மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் அவர்களின் சமூக மீளினைப்பு போன்ற பரந்துபட்ட வழிகளில் உதவியளித்து வருகிறது. இவ்வுதவிகள் மக்களின் தேவைகளுக்கு நேரடியாக சென்றடைந்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுதுவதன் மூலம் இலங்கையின் நீடித்து நிலைத்த சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும் என ஜப்பான் எதிர்பார்க்கிறது.

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் HALO Trust நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றல் திட்ட முகாமையாளர் திரு. பர்தலோமியு டிக்பி ஆகியோருக்கிடையே கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில பெப்ரவரி 8ம் திகதி 2013 அன்று கைச்சாத்திடப்பட்டது.